DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

............

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE AT PALLIPATTU**

Calendar

Miscellaneous

Preliminary Register Case No.C.C. 126 of 2017 PW :4

Sessions

Prosecution

Deposition of witness for Defence

Court

Name : திரு. பூபதி

Father's Name : திரு. வெங்கடேசன்

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age : 33

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 22.05.2026

**தேதி. 22.05.2026 ஆண்டுப்பட்டிகை வழக்கு எண் 126/2017 அ.த.சா.4 திரு.பூபதி த/பெ. திரு. வெங்கடேசன் வயது 33 அவர்களை சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்**

**முதல் விசாரணை**

நான் தற்போது பொம்மராஜிபேட்டை கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் ஓட்டுநராக பணிசெய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம், கைப்பற்றுதல் மகஜர்களில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பங்கள் என்னுடையது தான் அவைகள் முறையே **அ.த.சா.ஆ 5 முதல் அ.த.சா.ஆ 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** கடந்த 2017 ஆம் ஆண்டு நான் வேலைக்கு சென்றுவிட்டு வீட்டிற்கு வரும்போது பொம்மராஜிபேட்டை காவல் நிலையத்திற்கு அருகில் உள்ள சிவன் கோயிலுக்கு அருகில் வைத்து இந்த கையொப்பத்தை போட்டேன். எனது நண்பரின் அண்ணன் மணிகண்டன் என்பவரின் செல்போன் தொலைந்துவிட்டதாக கூறி போடச்சொன்னதின் பேரில் நான் கையொப்பம் செய்தேன். நான் அந்த இடத்தில் இவ்வழக்கின் எதிரியை பார்த்தேன். நீண்ட நாட்கள் ஆனதால் தற்போது நினைவில்லை. எங்கள் முன்னிலையில் அவர்தான் செல்போனை எடுத்துக்கொண்டதாக ஒப்புக்கொண்டதின் பேரில் அதில் சாட்சியாக இருக்க கேட்டுக்கொண்டதின் பேரில் நான் சாட்சி கையொப்பம் செய்தேன். என்னுடன் திருமலை என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தார். மேலும் அந்த இடத்திலேயே ஒரு செல்போனையும் இரண்டாவது செல்போனை அவரது பாட்டி வீட்டில் எடுத்து ஆஜர் செய்தார். என்னிடம் காட்டப்படும் புகைப்படங்களில் உள்ள செல்போன்களை தான் அன்றைய தினம் ஆஜர் எதிரி எடுத்து ஆஜர் செய்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் தற்போது நீதிமன்றத்தில் பார்த்த செல்போன் தான் எனது நண்பரின் அண்ணன் கூறித்தான் தொலைந்த செல்போன் என்று தெரியும். மேற்படி கையொப்பங்களை நான் காவல்

நிலையத்தில் வைத்து தான் செய்தேன் என்றால் சரியல்ல. நான் கையொப்பமிட்டது காவல் நிலையத்தின் எதிரில் என்றால் சரிதான். அங்கு போலிசார் இருந்தார்கள் நான் பார்த்ததாக சொல்லப்படும் நபரை பிடித்து வைத்திருந்தார்கள் என்றால் சரிதான். எனக்கு அவரது பெயர் மற்றும் அடையாளம் கூற முடியாது என்றால் சரிதான். என்னை போலிசார் அழைத்து விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். எனது நண்பர் மற்றும் போலிசார் அழைத்ததின் பேரில் தான் நான் தற்போது சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். நான் கையொப்பம் செய்ததில் உள்ள முழுவிவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் எனது முதல் விசாரணையில் கூறிய விவரம் எனது நண்பருக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. செல்போன் களவாடப்பட்ட பின்பு ஒரு வாரம் கழித்து தான் மேற்படி ஆவணங்களில் நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை இல்லை.**

**ஒப்பம் – K. வெங்டேசன், B.A., B.L.,**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்ற நடுவர்**

**பள்ளிப்பட்டு(FAC)**